Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு


EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 49
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க பங்குனி 17 ஜுல்ஹஜ் 30 சனிக்கிழமை (30-3-68)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

# 'கொள்கையை ஏற்றபின் கைச்சாத்து அவசியமா?

## எங்களிடம் இரகசியம் இல்லை; இரகசியத்தை பிரதமர் வெளியிடட்டும்'

### திருமதி சிறிமா கேட்கிறார்

கொழும்பு, வெள்ளி

"பொதுக் கொள்கைத் திட்டம் கைச்சாத்திடப் படடால், என்ன இல்லாவிட்டால் என்ன கொள்கைத் திட்டத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்" என்று எதிர்க்கட்சித் தலைவரும் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சித் தலைவியுமான திருமதி சிறிமா பண்டாரநாயகா கண்டி போகம்பரை மைதானத்தில்நடைபெற்றபொது கூட்டத்தின் பின் கட்சி அங்கத்தவர் ஒருவர் "ஏன் பொதுக் கொள்கைத் திட்டம் கைச்சாத்திடப்பட வில்லை" என்று கேட்ட போது கூறினார்.

"எங்களுக்குள் எவ்வித இரகசியமும் கிடையாது. நாங்கள் முன்னர் கூட்டர

(6-ம் பக்கம் பார்க்க)

## களுத்துறை எம். பி. கல்வீச்சில் காயம்

### ஆஸ்பத்திரியில் அனுமதி

கொழும்பு, வெள்ளி

களுத்துறை எம். பி. திரு சம்ளி குணவர்த்தன கல் வீச்சால் காயங்களுடன் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்.

எதிர்க்கட்சி கூட்டு முன்னணியினரின் பொதுக் கொள்கைத்திட்டம் கண்டி போகம்பரைமைதானத்தில் நேற்று பொதுமக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கப்பட்ட பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு திரும்புகையிலேயே திரு. சம்ளி குணவர்த்தன கல்வீச்சுக்கு இலக்கானார் என கூறப்படுகிறது.

வரக்காப்பொலை என்னுமிடத்தில் திரு. சம்ளி குணவர்த்தனவின் கார் வந்து கொண்டிருந்தபோது திடீரென இருளான இடத்தில் இருந்து கற்கள் வீசப்பட்டதாகவும் இதனால் பலத்த காயமடைந்த திரு. குணவர்த்தன கொழும்பு பெரியாஸ்பத்திரிக்கு கொண்டு செல்லப்பட்டதாகவும் கூறப்படுகிறது. திரு சம்ளி குணவர்த்தனவுடன் கொழும்பு தெற்கு எம். பி. திரு. பேர்னாட் சொய்சாவும் மற்றும் நால்வரும் காரில் பிரயாணம்செய்தனராம்.

சிவப்புக் கொடியுடன் கண்டியிலிருந்து வந்து கொண்டிருந்த பஸ் ஒன்றின்மீதும் கற்கள் வீசப்பட்டதாக பஸ்ஸில் பிரயாணம்செய்தோர் தங்கள் கட்சித்தலைவர்களிடம் புகார்செய்துள்ளனர்.

## தேசியசுவீப்முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

இன்று இழுக்கப்பட்ட தேசிய லொத்தர் சபையின் 187-வது சுவீப் முடிவுகள் பின்வருமாறு:

1-வது பரிசு

15 K 0029 ரூ. 100,000

2-வது பரிசு

01 L 0109 ரூ. 40,000

3-வது பரிசு

02 Z 0539 ரூ. 10,000

தலா ரூ 1415 பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்.

| | |
|---|---|
| 36 K 0062 | 07 E 0977 |
| 45 H 0623 | 11 K 0055 |
| 20 J 0375 | 22 U 0742 |
| 59 N 0411 | 53 L 0701 |
| 47 B 0698 | 16 Z 0119 |
| 11 V 0328 | 07 B 0904 |
| 15 C 0833 | 51 B 0043 |
| 12 K 0432 | 02 E 0033 |
| 43 U 0280 | 13 U 0598 |

(6ம் பக்கம் பார்க்க)

## "நல்ல ஒருவர் கிடைத்துவிட்டார் இனிமேல்வெளிநாடு போவேன்"

### சிவசிதம்பரத்துக்கு சபாநாயகர் பாராட்டு

உடுப்பிட்டி, வெள்ளி

"உபசபாநாயகர் தெரிவின்போது திரு. சிவசிதம்பரம் பாராளுமன்றத்திற்குச் சமூகம் கொடுக்காதபடியினால் எதிர்க்கட்சியின் சட்டப்பிரச்னையைக் கிளப்புவார்களோ, எதிர்த்துப் போட்டியிடுவார்களோ என நான் உள்ளூரப் பயந்து கொண்டிருந்தேன். ஆனால் யாருமே எதிர்பாராதபடி எதிர்க்கட்சியினரும்போட்டியின்றி மிகவும் மகிழ்ச்சியுடன் உடுப்பிட்டி எம். பியை உபசபாநாயகராகத் தெரிவு செய்தனர். நான் பல மாதங்களாக இலங்கையைவிட்டு வெளியே சென்று ஒய்வெடுத்துக் கொள்ள விரும்பினேன். ஆனால் எனது கடமைகளை நிர்வகிக்கக்கூடிய ஒருவர் கிடைக்காததால் பிரயாணத்தை ஒத்திவைத்தேன். திரு. சிவசிதம்பரம் எனது இக்குறையைத் தீர்த்துவிட்டார்."

இவ்வாறு பாராளுமன்ற சபாநாயகரும், சிலாபம் எம். பியுமான திரு. ஷேர்லி கொரியா உபசபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரத்துக்கு உடுப்பிட்டித்தொகுதி மக்களால் நேற்றிரவு அளிக்கப்பட்ட பாராட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார். திரு. வீ. எஸ். கந்தப்பு வரவேற்புரை கூறினார்.

சபாநாயகர் திரு. ஷேர்லி கொரியாவும், உபசபாநாயகர் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரமும், தமிழ்க் காங்கிரஸ் கட்சித்தலைவரும், யாழ்ப்பாணம் எம். பியுமான திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலமும், வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரமும் கரவெட்டி

(6-ம் பக்கம் பார்க்க)

## 'இடையூறாக இருந்தால் பதவியைத்துறந்துவிடுவேன்'

### உபசபாநாயகர் கூறுகிறார்

"எமது இனத்தைப்பாதிக்கக் கூடிய முறையிலோ, தமிழ் காங்கிரஸ் கட்சிக் கொள்கைகளுக்கு முரணாகவோ தேசிய அரசாங்கம் நடக்க முயன்றால் எனது இலட்சியத்துக்கு இடையூறாக இருக்கும் உபசபாநாயகர் பதவியைத் துறந்து விடுவேன்" என்று உடுப்பிட்டி எம். பி. யும், உபசபாநாயகருமான திரு. எம். சிவசிதம்பரம் தமக்களிக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"நான் பட்டம் பதவிகளை எதிர்பார்ப்பதுமில்லை. அதனைக்கண்டு மகிழ்வதுமில்லை. எனது தொகுதி மக்களின் மகிழ்ச்சியே எனது மகிழ்ச்சியாகும். விதி ஒருவனைத் திடீரென்று

(6-ம் பக்கம் பார்க்க)

## ஓர் எச்சரிக்கை

யாழ்ப்பாணம் ஆயுர் வேத சிகிச்சை நிலையமும், மருந்துத்தொழிற்சாலையும்
[Ayurveda Clinic and Pharmacy, Jaffna]

ACP

டாக்டர் K. C. சண்முகரெத்தினம்

அவர்களின் மேற்காட்டிய அடையாளம் பதித்த லேபல்களை கள்ளத்தனமாக அச்சிட்டு டாக்டர் அவர்களின் தைலங்கள் (Nos: 1—6) என்று கூறி போலிச்சரக்கை போத்தல்களில் அடைத்து விற்பதாகவும் இதனால், முக்கியமாகக், குழந்தைகளின் உடல் நலம் பாதிக்கப்படுவதாகவும் எமக்குப் புகார்கள் அத்தாட்சிகளுடன் கிடைத்துள்ளன.

இவ்விஷயம் பற்றி பொது மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டுமென்றும், கீழ்க்காட்டிய இரு ஸ்தாபனங்களிலேயே டாக்டர் அவர்களின் உண்மையான தைலங்களையும், மருந்து வகைகளையும் பெற்றுக் கொள்ளலாமென்றும், வேறு சிகிச்சை நிலையங்களில் எங்களுடையதைப் போன்ற, போலி லேபலுடன் விற்கும் தைலவகைகளுக்கு எமது ஸ்தாபனம் பொறுப்பு அல்ல என்பதையும் இதனால் தெரிவிக்கின்றோம்.

தலைமை ஸ்தாபனம்:
ஆயுள்வேத கிளினிக் & பார்மஸி
55, சிவன்கோவில் மேலை வீதி,
யாழ்ப்பாணம்.
[Phone: 546]

கிளை;
ஆயுள்வேத கிளினிக் & பார்மஸி
செப்பல் வீதி [Chapel St.]
3-ம் குறுக்குவீதி சந்தி
யாழ்ப்பாணம்.

508

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பணிவுடனிருங்கள். எல்லா உயிர்களையும் மானசீகமாக வணங்குங்கள். பகட்டு, செருக்கு, வெளிவேடம் ஆகியவற்றை அகற்றுங்கள்.
—சுவாமி. சிவானந்தா.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrm: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் பங்குனி மாதம் 17ம் திகதி [30-3-68]


## அரசாங்க சேவையில் அரசியல்

'அரசாங்க சேவையில் அரசியல் பாகுபாடு எதற்கும் இடமிருக்கக்கூடாதென்ற சிறந்த பண்பு அரசாங்க சேவையிலிருந்து நீங்கிக்கொண்டிருக்கிறதென்றும் இதன் விளைவாகப் பொதுமக்களுக்குக் கிடைக்கவேண்டிய சேவையைப் பொது மக்கள் இழந்துவிடுகின்றனர்' என்று தபால் தந்தி உத்தியோகத்தர் சங்கத் தலைவர் திரு வில்பிரட் பெரேரா சங்கத்தின் காலிக் கிளைக் கூட்டத்தில் குறிப்பிட்டது முற்றும் உண்மை. அரசாங்க சேவையிலுள்ளவர்கள், அவர்களின் சொந்த அரசியல் கொள்கை எதுவாக இருப்பினும், ஆட்சியிலுள்ள அரசாங்கத்தின் கொள்கைகளையும் திட்டங்களையும், உத்தரவுகளையும் அமுல் நடத்த வேண்டியதே அவர்களின் கடமை. நமது நாட்டில் இந்தக் கடமையைச் சரிவரச் செய்யும் அரசாங்க ஊழியர் தொகை மிக மிகக் குறைந்துவருகிறது.

அரசாங்க ஊழியர்களை மட்டும் இதற்காகக்குறை கூறமுடியாது. திரு. வில்பிரட் பெரேரா கூறுவதுபோல் அரசியல் வாதிகளும் ஒரு கட்சி கூடத் தள்ளுபடியில்லாமல் சகல அரசியல் கட்சிகளுமே இதற்குக்காரணமென்றே சொல்லவேண்டும். ஓர் அரசியல் கட்சி இன்று ஆட்சிபீடத்திலிருக்கும் நாளை வேறு கட்சி ஆட்சிக்கு வரலாம். ஆட்சி பீடத்தில் ஏற்படும் மாறுதல் கொள்கையில்தான் மாற்றங்களை ஏற்படுத்தும். ஆனால் நாட்டின் நிர்வாகத்தில் மாறுதல் ஏற்பட இடமில்லை. நாட்டின் நிர்வாகம் பொதுவாக அதிகார வர்க்கம் எனப்படும் அரசாங்க ஊழியர்களிடத்திலேயே தங்கியுள்ளது. நாட்டின் ஆட்சிபீடத்தில் அடிக்கடி மாறுதல் ஏற்படும் பொழுது அதிகாரவர்க்கத்திலும் மாறுதல் ஏற்பட்டால் நாட்டின் நிர்வாகம் சீர்குலைந்துவிடும். இதன் விளைவாக நாட்டின் முன்னேற்றமே தடைப்படும். பிரான்ஸ் தேசத்தில் நாளுக்கொரு மந்திரி சபையும் வாரத்துக்கொரு பிரதமருமாக ஸ்திரமற்ற அரசியல்நிலை இருந்த போதும் நாட்டின் நிர்வாகப் பொறுப்பைக் கவனிக்கும் அரசாங்க சேவை அரசியல் கலப்பற்றிருந்ததால் நாட்டின் நிர்வாகம்சீராக இருந்தது.

இங்கு ஒவ்வொரு கட்சி ஆட்சிபீடத்திற்கு வந்ததும் தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்ப அரசியல் வாதிகளின் தலையீடுகளால் அரசாங்க சேவையிலும் மாறுதல் மேற்கொள்ளப்பட்டது. கட்சி விருப்பு வெறுப்புடையவர்கள் அரசாங்க சேவையிலிடம் பெற்றதால் அரசாங்கசேவையிலுள்ள சிலர் தாங்கள்தான் அதிகாரமுடையவர்கள்என்ற எண்ணத்தில் அரசாங்கத்தின் கொள்கைகளுக்கே முட்டுக்கட்டைபோடத் தொடங்கினர். அரசாங்கம் கொண்டுவந்த தமிழ் மொழிச்சட்டவிதிகளையே அரசாங்க ஊழியர் பலர் எதிர்த்து வேலைநிறுத்தம் செய்தனரென்றால் அரசாங்க சேவையில் விருப்பு வெறுப்பு எந்த அளவுக்கு இடம்பெற்றுள்ளதென்பதைச் சொல்லவும் வேண்டுமா?

நாடு முன்னேறவும் நாட்டின்நிர்வாகம் சீராக நடைபெறவும் கட்சி அரசியல் விருப்பு, வெறுப்பு அரசாங்க சேவைக்குள் இடம் பெறக்கூடாது. இதற்கு அரசாங்க ஊழியரும் அரசியல் தலைவர்களும் ஒன்று சேர்ந்து முயற்சி செய்யவேண்டியது அவசியம்.

# மறைந்த விண்வெளி வீரர்

# யூரி ககாரின்

— வ. பொன்னம்பலம் —

( செயலாளர், இலங்கை சோவியத் நட்புறவுச் சங்கம் யாழ். கிளை )

[விமான விபத்தில் மரணமான விண்வெளிவீரர் யூரி ககாரின் இலங்கைக்கு விஜயம் செய்தபோது யாழ்ப்பாணத்துக்கும் வந்திருந்தார். யாழ். மாநகரசபையில் அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின்போது, அவரது பேச்சை தமிழில் மொழிபெயர்த்தவர் இக்கட்டுரையாளராவார்.]

விண்வெளிக் கப்பலில் உலகை வலம் வந்த முதல் சோவியத் விண்வெளிவீரர் கேர்ணல் யூரி ககாரின் உலகை விட்டே சென்றுவிட்டார் என்ற செய்தி பெருத்த அதிர்ச்சியை ஏற்படுத்திவிட்டது. முதலில் உலகைச் சுற்றி, உலக சாதனையொன்றை நிலைநாட்டி, உலக மக்களின் இதயங்களில் இடம்பெற்ற யூரி ககாரினின் மறைவு கோடானகோடி உலக மக்களுக்கு துன்பத்தையும்வேதனையையும் அளித்திருக்குமென்று சொல்லவும்வேண்டுமா? 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12ந்-திகதி விண்வெளியைச்சுற்றிய இளைஞர் யூரிககாரின், கூட்டுப்பண்ணையொன்றில் வேலைபார்த்த தச்சுத்தொழிலாளியின் மகனாகப் பிறந்து இளம்விமானியாகியவர்.

இன்றும் மறைந்த வீரர் கேர்ணல் யூரி ககாரினின் யாழ்ப்பாண விஜயம் என் மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கிறது.

1962-ம்ஆண்டு 12ம்மாதம் 10-ம்நாள் நகரமண்டபத்தின் முன் பெரும் கூட்டம்! வாகன நடமாட்டங்கள் மதியில் திறந்த ஜீப் வண்டியில் பவனி வந்த வீரர் கேர்ணல் யூரி ககாரினைக் காண யாழ்ப்பாணமே திரண்டு நின்றது. அவரை விமான நிலையத்தில் இருந்து யாழ்.நகர மண்டபத்திற்கு முன்னைநாள் படைத் தலைவர் கேர்ணல் உடுகம அழைத்து வந்தார்.

வரலாற்றுப் பழைமை வாய்ந்த யாழ்.நகரம் மனித வரலாற்றில் முதல் விண்வெளிப்பிரயாணியாகிய யூரி ககாரினை பெருமகிழ்ச்சியுடன் அன்று வரவேற்றது.

அன்று அவருக்கு தரப்பட்ட வரவேற்பில்-திரு.சி. சுப்பிரமணியம் [தலைவர்-இல.சோ.நட்.சங்கம்,யாழ். கிளை] பின்வருமாறு கூறினார்.

"உங்கள் சாதனை காலனால் கவரமுடியாதது. அறிவியல் தொழில் நுட்பத்துறையில் உங்கள் தாய்த்திருநாடு முந்திநிற்பதற்கு சான்றாக தங்கள் சாதனை விளங்குகின்றது".

அவருக்குத் தரப்பட்ட பொது வரவேற்பின்போது நவாலியூர் பண்டிதர் சோ. இளமுருகனாரின்வரவேற்புப் பா வாசித்தளிக்கப்பட்டது.

ஏப்ரல்12. 1961-ம்ஆண்டு உலகை வலம் வந்த விண்வெளிவீரனின் வயது 34 ஆகும். ரஷ்யக் குடியரசின் காட்ஸ்க் மாவட்டத்தில் பிறந்தவர் இவர்.

1941-ம் ஆண்டு பாடசாலையில் சேர்ந்தார். 1951ல் தொழில் படிப்பைமுடித்துக்கொண்டு வேலையில்சேர்ந்த பின்பும் இரவுப்பாடசாலையில் சேர்ந்து உழைத்து வந்தார். 1955-ல் தொழில் கல்லூரிப் படிப்பை முடித்தார்.

சிரடோப்பு விமானப் பயிற்சிக் கழகத்தில் சேர்ந்து விமானியாகவும் பயிற்சி பெறத் தொடங்கினர். 1957-ம் ஆண்டு விமானியாக ஓரன் பேக்கு நகரில் பயிற்சிபெற்ற ககாரின் சிறப்புக் கௌரவங்களுடன் உலகின் தலைசிறந்தவிமானியாக வளர்ந்தார்.

1960-ல் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் ஆனார்.

இவரின் சாதனை இடம் பெற்றபோது இவரின் மனைவியின் வயது 26. அவரின் பெயர் வலன்டினே. அவர் ஒரு மருத்துவ நிபுணராகக் கடமையாற்றுகிறார்.

ககாரினின் சாதனை விண்வெளி வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைகிறது.

மனிதன் இறப்பான். மனித குலம் இறவாது. மனிதகுலத்தின் இறவாத புகழ்சூட்டும் இந்த சாதனை ககாரினை அமரத்துவம் பெறச் செய்துவிட்டது. உலகுள்ளளவும் ககாரினின் புகழ் வாழும்.

## இன்றைய பலன்

பங்குனி மீ 17 உ
[30-3-68]
சனிக்கிழமை

திதி- துதியை.
நட்சத்திரம்- ரேவதி பகல் 9-54 மேல் அச்சுவினி.
ராகுகாலம்- 9-13—10-43
சுபநேரம்- 3-13—4-43.

இன்று பிறந்தவர்களுக்கு— வேடிக்கைச் சம்பவங்களும் விருந்து வைபவங்கள் நிறைய இடம்பெறும். நண்பர் குளாம் வலம் வரும். காசு கரியாகாமல் பார்த்துக்கொள்ளவும். தொழில்துறையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு மேலிடத்து ஆதரவு அவசியம் கிடைக்கும். எழுத்தாளர்களுக்கு நல்ல எதிர்காலமுண்டு. மாணவர்கள் மனக்கிளர்ச்சிகளுக்கு இடமளியாது நடந்துகொள்ளவும். உவகை தரும் உணர்ச்சிமயமான ஆண்டு.

மேஷம்- இனத்தவர் பகை, இல்லறமகசக்கும்.
ரிஷபம்- வார்த்தை ஜாலம், வசீகரப்பார்வை.
மிதுனம்- ஆசாரக் குறைவு, அவசரக் கோலம்.
கடகம்-மாதுருவழி மகிழ்ச்சி, மந்தகாச வாழ்வு.
சிம்மம்- வீட்டுநலன், வெற்றித்திருநாள்.
கன்னி- எதையும்தாங்கும் தயம்வேண்டும்.
துலாம்- ஊமைக்காதல் உரைநிகழ்த்தும் இன்று.
விருச்சிகம்- எதிர்பாராத முடை ஏமாற்றமுண்டு.
தனுசு- உற்றார் உறவு, உபயசெலவு.
மகரம்- மாற்றம் வரினும்மகிழ்ச்சியைத்தரும்.
கும்பம்- கால்நடைச் சுகம், காசும் சேரும்.
மீனம்- புண்ணை நெஞ்சம், புதிர்போடும்வாழ்வு.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## சென்னை நகரில் அமைதி நிலை

### தமிழக அரசுமுயற்சிகள்

சென்னை, மார்ச் 29

சென்னையில், மாணவர்களுக்கும், பஸ் தொழிலாளர்களுக்குமிடையே நடந்த கைகலப்பைத் தொடர்ந்து நகரில் சகஜநிலையை ஏற்படுத்தத் தமிழக அரசாங்கம் சகல முயற்சிகளும் எடுத்துவருவதாகத் தமிழக கல்வி மந்திரி திரு. இரா. நெடுஞ்செழியன் தமிழக மேல் சபையில் தெரிவித்தார். அமைதியை நிலைநாட்ட அரசாங்கம் தவறுது என அவர் உறுதியளித்தார்.

கல்லூரிகள், மாணவர் விடுதிகள், பஸ் நிலையங்களில் தொடர்ந்து பொலிஸ் பாதுகாப்பு இருந்துவருவதாகவும் அவர் கூறினார்.

**மீண்டும் சம்பவம்**

இதற்கிடையில், நேற்று ஒரு என்ஜினியரிங் மாணவன், பஸ் கண்டக்டர் ஒருவரைத் தாக்கியதைத் தொடர்ந்து, இன்று காலை நகரிலுள்ள 1000க்குமதிகமான பஸ்களில் ஆக 200 பஸ்கள் மட்டுமே சில பாதைகளில் ஓடின.

## நாட்டிலும் நகரிலும்

குடும்பக்கட்டுப்பாடு செய்தல் கொலைக்கு சமானம் என்று நமது கல்வி மந்திரி ஈரியகொல்லை மகாத்மயா கூறியிருக்கிறார்.

பிள்ளைப் பெருக்கத்தைத் தடுக்க உதவும் குளிகைகள், வளையங்கள் முதலிய எந்தக் கருவிகளையும் சாதனங்களையும் உபாயங்களையும் தாம் முற்றிலும் எதிர்ப்பதாக அப்பெரியார் சொல்லுகிறார்.

குடும்பக் கட்டுப்பாடு என்ற கருத்தையே பிரசாரம் பண்ணும் எந்த முயற்சியையும் எதிர்க்கப் போகிறாராம்.

திரு. ஈரியகொல்லை நமது தேசிய அரசாங்கத்தில் ஒரு பொறுப்பான பதவி வகிக்கும் கனம் மந்திரி குடும்பக் கட்டுப்பாடு என்ற விஷயம் பற்றி இன்றுவரை பிரதம மந்திரி தொடக்கம் வேறு எந்த மந்திரியாவது வாய் திறக்கவில்லை. முதன்முதலாக இதுபற்றி அபிப்பிராயம் தெரிவித்திருப்பவர் நமது கல்வி மந்திரியே.

ஜனநாயக அரசியல் முறையின்கீழ் மந்திரிசபையில் கருத்து வேற்றுமைக்கு இடம் கிடையாது; இடம் வரவேமாட்டாது. யாராவது ஒருமந்திரி ஒரு பொது விஷயமாக தமது கருத்தை வெளியிட்டால் அது மந்திரி சபையின் அதாவது அரசாங்கத்தின் அபிப்பிராயம் என்றே கொள்ளல் வேண்டும்.

அப்படியானால் திரு. ஈரிய கொல்லை குடும்பக்கட்டுப்பாடு சம்பந்தமாக வெளியிட்டுள்ள கருத்து அரசாங்கத்தின் கருத்து தானா என்ற கேள்வி எழுகிறது.

ஈரியகொல்லை மகாத்மயா இத்துடன் நின்றுவிட்டால் பரவாயில்லையே! இலங்கையின் சனத்தொகை வருடமொன்றுக்கு இரண்டு லட்சமாகப் பெருகுகிறதென்றும் வருகிற வருடங்களில் இத்தொகை இரண்டு மூன்று மடங்காகப் பெருக வேண்டும் என்று தாம் ஆண்டவனைப் பிரார்த்திப்பதாகவும் மந்திரியவர்கள் கூறியிருக்கிறார்.

குடும்பக் கட்டுப்பாடு வேண்டாம் என்று சொல்லிவிட்டிருந்தால் போகட்டும் என்று விடலாம். குடும்பப் பெருக்கம் அதிகரிக்க வேண்டுமென்று கூறுகிறாரே, அதுதான் விளங்கிக் கொள்ள சற்று கஷ்டமாயிருக்கிறது.

ஏற்கெனவே இலங்கையிலுள்ள சனத்தொகைக்குப் போதிய உணவு தேடுவதற்கு அரசாங்கம் பிச்சைக்காவடி எடுக்கிறது. வயதுவந்த மக்களுக்கு தொழில்வசதி செய்து கொடுக்கத் தோப்புக்கரணம் அடிக்கிறது. பள்ளிக்கூட வயதுவந்த சிறுவர் சிறுமியர்களுக்கு இலவசக் கல்வியளிப்பதற்கும் போதிய பாடசாலைக் கட்டடங்கள் முதலிய கல்விவசதிகளை அளிப்பதற்கும் திண்டாடுகிறது. இதை வேறு யாரும் உணராவிட்டாலும் கல்விமந்திரியாகிய ஈரிய கொல்லை உணர வேண்டும்.

அப்படியிருந்தும் சனத்தொகை பெருக வேண்டும் என்று பிரார்த்திக்கிறார் அவர்.

அரசாங்க வருமானத்தில் ஒரு பெருஞ் சுனை உணவுக்கும், இலவசக் கல்விக்கும், அரசாங்க ஊழியர் சம்பளத்துக்கும் பறிபோய்விடுகிறது. அந்நிய செலாவணி கிடைபாமல் பிரதமர் சிக்கன இயக்கங்கள் தொடங்கியுள்ளார்.

(4-ம் கலம் பார்க்க)

[5-ம் கலத்தொடர்ச்சி]

நிலைமை இப்படியிருக்கையில் சனத்தொகை மேலும் பெருக வேண்டுமென்று கூறுவதில் என்ன அர்த்தமிருக்கிறதென்று தெரியவில்லை.

'படைத்தவன் படி அளப்பான்' என்ற நம்பிக்கையோ?

—வழிப்போக்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுடில்லி

# ஐ. நா. வர்த்தக அபிவிருத்தி மகாநாடுபற்றி

# பொதுவான அதிருப்தி

## அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பிரதிநிதிகள் வெளியிட்டுள்ளனர்

புதுடில்லி, மார்ச் 29

**புதுடில்லியில் கடந்த 2 மாதங்களாக நடைபெற்றுவந்த 2வது ஐ.நா. வர்த்தக, அபிவிருத்தி மாநாட்டின் முக்கியமான வேலைகள் நேற்று முடிவடைந்தன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள் அளிக்கும் உதவி பற்றிய பிரகடனம் ஒன்றை மாநாடு நேற்று நிறைவேற்றியது. இன்றுடன் உத்தியோகபூர்வமாக மாநாடு முடிவடைகிறது. மாநாட்டின் அலுவல்கள் பற்றிய அறிக்கையை இன்று மாநாடு ஆராயும்.**

மாநாட்டின் வெற்றிபற்றி, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளின் பிரதிநிதிகள் பொதுவாக அதிருப்தி வெளியிட்டுள்ளார்கள்.

### பிரேஸில் பிரதிநிதி

பிரேஸிலைச் சேர்ந்த பிரதிநிதியே, மாநாட்டின் முடிவுகளையிட்டு கடுமையான அதிருப்தி வெளியிட்டார். அவர் மாநாட்டை ஒரு தோல்வியென்றே வர்ணித்தார். மாநாட்டின் விளைவுகள், கசப்பானதும். பாரதூரமானதுமாகஇருக்குமென அவர் எச்சரித்தார்.

மாநாட்டைச் சேர்ந்த '77 நாடுகள் குழு' மந்திரிகள் கட்டத்தில் விரைவில் சந்திக்கவேண்டுமென அவர் விருப்பம் தெரிவித்தார்.

அபிவிருத்தியடைந்துள்ள நாடுகள், மாநாட்டின் வெற்றிக்கு அவ்வளவு தூரம் உதவவில்லை என்பதே பல அபிவிருத்தியடைந்துவரும் நாட்டுப்பிரதிநிதிகளின் கருத்தாக விளங்கியது.

### இந்தியப்பிரதிநிதி

ஆனால், இந்திய தூது கோஷ்டியின் உதவித்தலைவரான திரு கே. பி. லால் மாநாட்டு மீதான அதிருப்தியை வெளியிடுவதற்குஇது வல்ல சரியான சந்தர்ப்பமெனக் கூறினார்.

பல வகைகளில் மாநாடு திருப்திகரமான முறையில் அலுவல்களைச் செய்துள்ளதெனவும், முக்கியமாக, தேவைகள் என்ன என்பதற்கும், அத்தேவைகளை நடைமுறையில் பூர்த்திசெய்யக்கூடிய அளவுக்குமிடையேயுள்ள பேதத்தை நீக்க அது உதவியுள்ளதெனவும் திரு. லால் தெரிவித்தார்.

## ரொடீஷியாவில் சண்டை

சலிஸ்பரி மார்ச் 29

ரொடீஷியாவில், ஆபிரிக்கத் தேசியவாதிகளுக்கும் ரொடீஷிய பாதுகாப்புப் படையினருக்குமிடையே தொடர்ந்து சண்டை நிகழ்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆபிரிக்கத் தேசியவாதிகள் இருவரைத் தமது படைகள் கொன்றுள்ளதாகவும், இத்துடன் கொல்லப்பட்ட தேசியவாதிகள் தொகை 27 எனவும்ரொடீஷிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

தேசியவாதிகளிடமிருந்து ஆயுதங்களையும் தாங்கள் கைப்பற்றியுள்ளதாகவும் அவை மேலும் அறிவித்துள்ளன.

---

## இஸ்ரேலுக்கு விமான விற்பனை

### பிரான்ஸ் மறுப்பு

பாரிஸ், மார்ச் 29

பிரான்ஸிடமிருந்து 2 வருடங்களுக்கு முன் இஸ்ரேல் 'ஓடர்' செய்திருந்த 50 'மிராஜ்' போர் விமானங்களை இஸ்ரேலுக்கு விற்க பிரான்ஸ் மறுத்துள்ளது.

மேற்கு ஆசியப் போர் வெடித்தபோது, இஸ்ரேலுக்கு இராணு ஆயுதங்கள், உபகரணங்கள் விற்பதை பிரான்ஸ் தடைசெய்திருந்தது.

## பெண்ணின் இருதயத்துக்கு பன்றியின் 'வால்வு'கள்

### பிரிட்டிஷ் டாக்டர்கள் ஆற்றியுள்ள சாதனை

லண்டன், மார்ச்29

இங்கிலாந்தில், லீட்ஸ் ஆஸ்பத்திரியில், ஒருபெண்ணின் இருதயத்துக்குப் பன்றி ஒன்றின் 3 இயற்கை 'வால்வுகளை' டாக்டர்கள் பொருத்தி புதிய மருத்துவ சாதனை ஒன்றை நிலைநாட்டினர்.

திருமதி ஜீன் பாஸ்டோ என்ற அப்பெண்மணிக்கு இப்போது வயது 30 ஆகிறது. அவருக்கு 2 குழந்தைகள் உண்டு.

பன்றியில்'வால்வு'கள் பொருத்தப்பட்ட பின்னர் திருமதி ஜீன் பாஸ்டோ குணமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## பிரிட்டிஷ் ஆளுங்கட்சி 4 உப தேர்தல்களில் தோல்வியடைந்தது

லண்டன், மார்ச் 29

பிரிட்டனில் ஆளுங்கட்சியாக விளங்கும் பிரிட்டிஷ் தொழிற்கட்சி, நான்கு உப தேர்தல்களில் தோல்வியுற்றுள்ளது.

மூன்று உப தேர்தல்களில் தொழிற்கட்சியிடமிருந்து எதிர்க்கட்சியான கன்சர்வேடிவ் கட்சி, ஸ்தானங்களைப் பறித்துள்ளது.

நான்காவது உபதேர்தலில், தனது பழைய ஸ்தானத்தை, முன்னிலும் பார்க்க அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளால் கன்சர்வேடிவ் கட்சி காப்பாற்றிக் கொண்டுள்ளது.

---

## இந்திய பாதுகாப்பு நடவடிக்கைகள்

### லோகசபையில் பிரஸ்தாபம்

புதுடில்லி, மார்ச் 29

இந்திய லோக சபையில், இந்திய பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட வேண்டுமெனப் பல அங்கத்தவர்கள் நேற்று வலியுறுத்தினர்.

பாகிஸ்தான், சீனு ஆகிய இரு அண்டை நாடுகளினதும் அபாயம் குறித்து அவர்கள் கவலை வெளியிட்டனர்.

சீனுவின் அணு ஆயுத ஆபத்தைச் சமாளிக்க, இந்தியாவும் அணு ஆயுத உற்பத்தியில் இறங்க வேண்டுமெனவும் சபையில் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.

தனது அணு ஆயுத உற்பத்தி பற்றிய கொள்கையை இந்திய அரசாங்கம் புனராலோசனை செய்யவேண்டுமெனச் சில அங்கத்தவர்கள் கோரினர்.

நாட்டின் பாதுகாப்பை முன்னிட்டு, எல்லைப்புறங்களில் வசிக்கும் மக்களின் நலனில் அரசாங்கம் அதிக அக்கறை காட்டவேண்டுமென வேறு சில அங்கத்தவர்கள் வலியுறுத்தினர்.

## யூ தாண்ட் அனுதாபம்

நியூயோர்க். மார்ச் 29

உலகின் முதலாவது விண்வெளி வீரரான யூரி ககாரின் மரணமெய்தியதையொட்டி, ஐ. நா. பொதுக்காரியதரிசி யூ தாண்ட், ரஷ்யப் பிரதமர் திரு. அலெக்ஸி கொஸிஜினுக்கு ஒரு அனுதாபச் செய்தியை அனுப்பியுள்ளார்.

அமெரிக்க ஜனுதிபதி திரு. ஜோன்சனும் அனுதாபச் செய்தி ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## டோக்கியோவில் இடதுசாரி மாணவர் ஆர்ப்பாட்டம்

### 111 பேர் காயம்

டோக்கியோ, மார்ச் 29

டோக்கியோவில், நேற்று ஆர்ப்பாட்டங்களில் இறங்கிய இடதுசாரி மாணவர்கள், ஒரு ஆஸ்பத்திரியைச் சிறிது நேரம் சிறைப்படுத்தி விட்டனர்.

வியட்னும் போரில் காயமுற்ற அமெரிக்கப் போர் வீரருக்கு இந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சை அளிக்கப்படுவதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்த இந்த மாணவர்கள், ஆயிரக்கணக்கில் ஆஸ்பத்திரி வளவிற்குள் புகுந்து அங்கு சுற்றி வளைத்துப் போடப்பட்ட பொலிஸ்படையினரையும் மீறி, ஆஸ்பத்திரி வளவுக்குள் நுழைந்து விட்டனர்.

ஆஸ்பத்திரிக்குள் சென்ற அம்மாணவர், ஏறத்தாழ அரை மணி நேரம், கண்ணில் காணப்பட்ட, உடைக்கப்படும் சாமான்கள் எல்லாவற்றையும் அடித்து நொறுக்கி அட்டகாசம் செய்தனர்.

ஈற்றில், பொலிசார் தடியடிப் பிரயோகம் செய்து, மாணவரை ஆஸ்பத்திரியிலிருந்து கலைத்தனர்.

பொலிசாருக்கும் மாணவருக்குமிடையே ஏற்பட்ட மோதலில், 111 பேர் காயமடைந்து, ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். காயமடைந்தோரில் அநேகர் பொலிஸ்காரராவர்.

இந்திய

## திரைப்பட கமிட்டி

புதுடில்லி, மார்ச் 29

இந்தியத் திரைப்படத் தொழில் பற்றிப் பரிசீலனை செய்து அறிக்கையொன்றைச், சமர்ப்பிக்கவென இந்திய அரசாங்கம் ஒரு கமிட்டியை நியமித்துள்ளது.

இக்கமிட்டியின் தலைவராக முன்னுள் பஞ்சாப் நீதியரசர் திரு. ஜி. டி. கோஸ்லா நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. கே. ஏ. அபாஸ் திருமதி நர்கிஸ் சுனில்தத், திரு. ஏ. வி. மெய்யப்பன் திரு ஆர். கே. நாராயண் ஆகியோரும் இக்கமிட்டியிலுள்ள சில அங்கத்தவர்களாவார்.

கமிட்டி தனது அறிக்கையை அடுத்த ஜூலையில் சமர்ப்பிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

## சுகார்டோவுக்கு ஆசிகள்

புதுடில்லி, மார்ச் 29

இந்திய ராஷ்டிரபதி டாக்டர் சாகீர் ஹுசெயினும், பிரதமர் திருமதி இந்திரா காந்தியும் இந்தோனேஷியாவின் ஜனுதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜெனரல் சுஹார்டோவுக்குத் தமது ஆசிகளை அனுப்பியுள்ளனர்.

---

### ஜப்பானில் சுஹார்டோ

ஜெனரல் சுஹார்டோ தற்போது ஜப்பானுக்கு விஜயம் செய்துள்ளார். அவருடன் கூடவே, இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி டாக்டர் ஆதாம் மாலிக்கும் சென்றுள்ளார்.

'தெ. மே. ஆபிரிக்காவினுள்

# ஐ. நா. அங்கத்தவர் எவரையும் அனுமதிக்க முடியாது'

## தென்னுபிரிக்கப் பிரதமர் வோஸ்டர் அறிவிப்பு

பிரிடோரியா, மார்ச் 29

தென் மேற்கு ஆபிரிக்காவிற்குள் ஐ. நா. கவுன்ஸில் அங்கத்தவர் எவரையும் தமது அரசாங்கம் அனுமதிக்கப் போவதில்லை என்று தென்னுபிரிக்கப் பிரதமர் திரு. வோஸ்டர் இங்கு அறிவித்துள்ளார்.

ஐ. நா. உத்தரவாதம் பெற்ற பிரதேசமான தென் மேற்கு ஆபிரிக்கா மீது தென்னுபிரிக்க அரசாங்கம் சட்டவிரோதமாக அதிகாரம் செலுத்திவருவதுதெரிந்ததே.

தென் மேற்கு ஆபிரிக்கா மீதான ஐ. நா. கவுன்ஸிலைச் சேர்ந்த அங்கத்தவர் எவருக்கும், தென் மேற்கு ஆபிரிக்காவில் இறங்குவதற்கு வசதிகள் அளிக்கப்படமாட்டாவென அறிவித்துள்ள திரு. வோஸ்டர், ஐ. நா. விசேஷ பிரதிநிதி எவரையும் கூடத் தனது அரசாங்கம் அங்கு அனுமதிக்காது என்றும் கூறியுள்ளார்.

---

உடுவில். வெள்ளி

இணுவில் உடுவில் பகுதிகளில் உள்ள தோட்டங்களில் காய்கறிகள் இரவில் களவாடப்படுகின்றனவாம் கத்தரி மிளகாய், வெண்டி புடற்ங்காய் ஆகியவையே அதிகமாக 'களவாடப்படுகிறதாம். இது சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ஜோர்தானுக்கு ஆயுதங்கள்

### அமெரிக்கா விற்கிறது

அம்மான். மார்ச் 29

அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்கள், விமானங்கள் ஆகியவற்றை ஜோர்தான் வாங்குவதற்கான புதிய ஒப்பந்தமொன்று, இரு நாடுகளுக்குமிடையே இங்கு கைச்சாத்தாகியுள்ளது.

இந்த ஆயுதங்கள், விமானங்களின் பெறுமதி. 3கோடி டொலராகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## றிமாண்டில் வைக்க உத்தரவு

குரும்பசிட்டி, வெள்ளி

தொல்புரம் பொத்தியாவத்தை வாசியான கிருஸ்ணன் பாலசிங்கம் என்பவரை கத்தியால் வெட்டிக் கொலை செய்ததாக சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திருமென்டிஷ் அகேயிடத்தைச் சேர்ந்த கே. இராசையா என்பவர் மேல் கொலைக்குற்றம் சுமத்தி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

நீதிபதி திரு. எம் சண்முகலிங்கம் தமது முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்ட எதிரியை அடுத்தமாதப் 6-ம் திகதிவரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டுள்ளார்.

---

விவசாயப்படை

## ஆள் சேர்க்கும் திகதி மாற்றம்

நல்லூர், வெள்ளி

விஸ்வமடுக்குளத்திட்டம், முத்தையன்கட்டு குளத்திட்டம் ஆகிய முகாம்களுக்கு விவசாயப்படைக்கு ஏப்ரல் மாதம் 4-ம், 5-ம் 6-ந் திகதிகளில் ஆள் சேர்க்கப்படும். இம்மாதம் 29-ம் 30-ம், 31-ந் திகதிகளில் ஆள் சேர்க்கப்படுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

விவசாயப்படை முகாம் ஆணையாளர் இந்தத் தகவலை கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினத்துக்கு அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோரிலும், யாழ்ப்பாணம் கச்சேரியிலும் விவசாயப்படைக்கு அடுத்த மாதம் 4-ந் திகதி ஆள் சேர்க்கப்படும். 5-ந் திகதி கிளிநொச்சியில் விவசாயப் படைக்கு ஆள் சேர்க்கப் படும்.

## பிரயாணிகள் சங்கம் கோரிக்கை

ஊர்காவற்றுறை, வெள்ளி

ஆஸ்பத்திரிக்கு செல்வோரின் வசதியை முன்னிட்டு ஊர்காவற்றுறை யாழ்ப்பாணம் 778 இலக்க பஜ சேவை ஆரம்பிக்க வேண்டுமென இ. போ. ச. முகாமையாளரை சரவணை பஸ் பிரயாணிகள் சங்கம் கேட்டுக்கொண்டது. குறித்த பஸ்சேவை ஆரம்பிக்கப்படாமலிருப்பதால் கிராமமக்கள் கஷ்டப்படுகிறார்களெனவும் பிரஸ்தாப சங்கம் கோரியுள்ளது.

## கட்டுவன் கொலைவழக்கு

குரும்பசிட்டி, வெள்ளி

மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் கட்டுவன் கொலைவழக்கை சுப்ரீம் கோர்ட் விசாரணைக்குபாரப்படுத்தியுள்ளார்.

காங்கேசன்துறைப் பொலிஸார் இவ்வழக்கில் கட்டுவனைச் சேர்ந்த எட்டுப் பிள்ளைகளின் தாயாரான கந்தையா பெண் அன்னம்மா (வயது 36) என்ற பெண்மணியை இவ்வருடம் ஜனவரிமாதம் 28-ந் திகதி கொலைசெய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த வல்லிபுரம் சந்திரசேகரம் என்பவர்மீது குற்றஞ்சாட்டியுள்ளனர்.

---

தீவுப்பகுதி

## படகுச்சேவை நல்லமுறையில் இயங்குகிறது

அனலைதீவு, வெள்ளி

தீவுப்பகுதி படகுச்சேவை நேரசூசிகையின்படி படகுகள் புறப்படாமல் முந்தியும் பிந்தியும் புறப்பட்டுவந்த மோட்டார்ப் படகுகள் தற்சமயம் தீவுப்பகுதிக் காரியாதிகாரியின் தலையீட்டால் சீரிய முறையில் இயங்குகின்றது.

ஊர்காவற்றுறை, எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு முதலிய இடங்களுக்குப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள படகுகள் குறிப்பிட்ட நேரங்களில் புறப்படாமல் சம்பந்தப்பட்ட படகுச் சொந்தக்காரர்கள் விரும்பிய நேரங்களில் புறப்படுவதாகவும் இதனால் பிரயாணிகள் கஷ்டப்படுவதாகவும் அனலைதீவு பிரயாணிகள் சங்கம், தீவுப்பகுதிக் காரியாதிகாரி திரு. விநாயகலிங்கத்துக்குப் புகார் தெரிவித்ததைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வியாகுலமாதா திருநாள்

பண்டத்தரிப்பு, வெள்ளி

இளவாலை புனித அன்னம்மாள் ஆலயத்தின் வருடாந்த வியாகுல மாதாவின் உற்சவம் சித்திரைமாதம் 5-ம் திகதி நடைபெறவிருக்கிறது.

முபில்நாள் மாலை வியாகுலமாதாவின் சொரூப சுற்றுப்பிரகாரமும் மறுநாள் மாலை திருச்சிலுவைப்பாதையும் நடைபெறும்.

---

செக்.

## ஜனாதிபதியாக திரு டுபெக் நியமனம்

பிராக், மார்ச் 29

அண்மையில் பதவியிலிருந்து ராஜினாமச் செய்த செக்கோஸ்லாவாக்கிய ஜனாதிபதியின் இடத்தில், திரு. அலெக்ஸாண்டர் டுபெக் நியமனத்தைச் செக்கோஸ்லாவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி அங்கீகரித்துள்ளது.

## இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம்

சனிக்கிழமை 30-3-68

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00.

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-45 திருப்பாடல்கள், 7-20 தினக்குறிப்பு, 7-30 குரல் வகை 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம் 1-00 மாதர்கேட்டவை

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 சதம்பஇசை.

இரவு 6-15 கோட்டு வாத்தியம் - மனோரஞ்சிதம் லோகேஸ்வரன், 6-45 பாவளம், 7-30 நேயர் விருப்பங்கள் 7-45 நாடகம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 யூனெஸ்கோ உரைச் சித்திரம், 9-45 கலைக் கோலம், 10-15 [illegible] இசை.

---

வல்லை கார்-பஸ் மோதல்

# இ. போ. ச. சாரதி மீது கொலைகுற்றச்சாட்டு

வல்வெட்டித்துறை, வெள்ளி

"பஸ்சாரதி பஸ்ஸை மிக வேகமாகச் செலுத்திக் கொண்டுவந்து எங்கள் காருடன் மோதவிட்டார். காருடன் மோதியதால் எனக்கு பலமான காயம் ஏற்பட்டது. அத்துடன் உடனே மயக்கமும் ஏற்பட்டு விட்டது. பின்னர் நான் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தேன். பதினைந்து நாட்களுக்குப்பின்னர் பொலிசார் எனது வாக்குமூலங்களைப் பதிவு செய்தனர்" என்று சரணமுத்து தவராசா என்பவர் பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. கே. வின்னராசா முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினர்.

பருத்தித்துறை முன்னாள் சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. ஜீவநாயகத்தையும் மற்றும் கற்கோவளத்தைச் சேர்ந்த தேவதாசன், கனகமுத்து ஆகியோரையும் இ. போ. ச. பஸ்ஸினால் மோதி கொலை செய்ததாகவும், குணநாயகம், தவரத்தினம், தவராசா ஆகியோருக்கு காயம் உண்டுபண்ணியதாகவும், பருத்தித்துறை டிப்போ பஸ் சாரதியான க. சிங்காரவடிவேலு மீது வல்வெட்டித்துறை பொலிசாரால் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

தவராசா தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:—

யாழ்ப்பாணத்திலிருந்து டாக்டர் ஜீவநாயகத்தின் காரில் பருத்தித்துறைக்குப் புறப்பட்டோம். கார் சராசரி 25 அல்லது 30 மைல் வேகத்தில் ஓடிக்கொண்டிருந்தது. வல்லை தொண்டமானாற்றுச் சந்தியால் எங்களுடைய கார் வல்வெட்டித்துறையை நோக்கிப் போய்க்கொண்டிருந்தது. சந்திக்குக்கிட்ட வந்ததும், தொண்டமானாறு - நெல்லியடிக் கூடாகச் செல்லும் பஸ் ஒன்று எங்கள் காருடன் மோதுவதைக் கண்டேன். மோதியதும் எனக்கு மயக்கம் உண்டானது.

மு. அரியம் சாட்சியமளித்தபின் மாஜிஸ்திரேட் மேல் விசாரணையை அடுத்தமாதம் 4-ந் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

---

## "யோசனைகள் தெரிவிப்பதிலேயே காலத்தைக் கழியாதீர்"

### நூல் வெளியீட்டு விழாவில் எஸ். ஆர். கனகநாயகம் கருத்து

குரும்பசிட்டி, வெள்ளி

"யாரும் எந்த ஒரு மொழியிலேனும் அபிமானம் செலுத்தத் தொடங்கினால் நாளடைவில் அந்த மொழியை நன்கு கற்றுத் தெளியலாம். இவ்வகையில் எனக்குத் தமிழ் மொழி மீது அபிமானத்தை உண்டாக்கியவர் ஈழகேசரி பொன்னையா. இதனால் ஆங்கில மொழிமூலம் கல்விகற்றுதேர்ச்சியடைந்த நான் பின்னர் தமிழ்மொழியிலும் எழுத்தார்வம் கொண்டு பல கட்டுரைகளை ஆக்கி வெளியிட்டுள்ளேன். சிலர் நான் ஆங்கிலத்தில் எழுதியபின்னர் தமிழ்மொழி பெயர்ப்பு செய்வதாக தப்பாக நினைக்கின்றனர். நான் தமிழ்மொழியில் நேரடியாக எழுதுகின்றேன்."

குரும்பசிட்டி சன்மார்க்க சபை மண்டபத்தில் நடைபெற்ற ரசிகமணி கனக. செந்திநாதனின் 'ஈழம்தந்த கேசரி' நூல் வெளியீட்டு விழாவிற்கு தலைமை தாங்கிப் பேசும்போது திரு. எஸ். ஏச். பேரின்பநாயகம் மேற்கண்டவாறு தெரிவித்தார். ஈழகேசரி பொன்னையாவின் 17 வது நினைவு விழாவை யொட்டி பொன்னையா நினைவு மன்றத்தாரால் இந் நூல் வெளியிடப்பட்டது.

திரு. பேரின்பநாயகம் தொடர்ந்து பேசுகையில், திரு. பொன்னையா பற்றிய இந்நூல் அவரது பிறப்பு, வளர்ச்சி, வாழ்க்கை விபரங்களை மட்டும் வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கவில்லை என்றும் இதனாசிரியர் ஓர் இலக்கியக் கண்ணோட்டத்தில் நூலை ஆக்கியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

இவ்விழாவில் நியாயவாதி திரு. எஸ். ஆர். கனகநாயகம் பேசியதாவது:-

தமிழ் மக்கள் தமது எதிர்கால முன்னேற்றம் குறித்து யோசனைகள் தெரிவிப்பதில் காலத்தை வீணாக்காமல் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தமிழ்த் தலைவர்கள் எடுத்துக்காட்டி தமிழ் இனத்தை வாழவைக்க வேண்டும். தற்போது நமது நாட்டின் கல்வித்தரம் மிகக் குன்றிய நிலையில் இருக்கின்றது. யுத்த காலங்களில் ஏற்பட்ட உணவுப்பொருட்கள் கட்டுப்பாட்டின் போது ஈழகேசரி பொன்னையா உணவு உற்பத்தித்துறையில் கவனம் செலுத்தி மக்களையும் ஆர்வப்படுத்தினர்.

பழையகாலத்தில் ஆலயங்களில் புராணங்கள் படிக்கப்பட்டுவந்தது. சைவசமய வளர்ச்சி இப்போது குறை

(5-ம் பக்கம் பார்க்க)


# மிளகாய் நோய்

BAYER

தற்பொழுது மிளகாய்ச் செடிகளைப் பாதிக்கும் தூசி பூஞ்சணவன் கீழ்ப்பக்கபூஞ்சணவன் வியாதியினாலும் குருமன் நோய் அல்லது இலை சுருள் வியாதியிலிருந்து காப்பாற்ற

## குப்றுவிற் (செப்புப் பங்கசு கொல்லி)

## மெற்றசிஸ்டொக்ஸ் 'ஆர்'

ஆகிய இரண்டையும் கலந்து தெளிப்பது நலம். 1000 கண்டு தறைக்கு 10 கலன் நீரில் 4 அவுன்ஸ் குப்றுவிற் 2 திராவகஅவுன்ஸ்மெற்றசிஸ் டொக்ஸ் கலந்து தெளித்தல் வேண்டும்.

- எல்லாப் பயிர்களுக்குத் தேவையான மற்றும் பூச்சி, காளான், களை கொல்லிகள்.

பொலிடோல், மெற்றசிஸ்டொக்ஸ், லேபேசிட், மட்டாசில், பொலித்தியோன், டிப்ரறெக்ஸ், குப்றுவிற், செரசான், பேர்பாம், டக்தல், ஹெடோனல் "எம்", ஹெடோனல் "டி", சேர்கோப்பூர் 36%

கிடைக்குமிடங்கள்:

(1) புறேவின்ஷல் டிஸ்றிபியூட்டர்ஸ், ஒட்கோஸ் கட்டிடம், யாழ்ப்பாணம்.

(2) வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.



## "யாழ்ப்பாணக் கிளை"

டபிள்யூ. எஸ். பெருண்டோ அன் சன், (நீர்கொழும்பு)

திருமணச் சடங்குகள், மரணச் சடங்குகள் சம்பந்தமான சகல ஒழுங்குகளுக்கும் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள். புத்தம் புதிய பூக்கள், பூச்செண்டுகள், மலர் வளையங்கள் எமமிடம் கிடைக்கும். பல ரகப் பிரேதப் பெட்டிகள் எம்மிடம் உண்டு. பிரேதம் கெடாதபடி பாதுகாத்துவைப்பதில் நவீன முறைகள் கையாளப்படும். பிரேதம் கொண்டு செல்லும் நவீன வண்டிகள் உண்டு. ஞாபகச் சின்னங்கள் சிறந்த வகையில் அமைத்துக் கொடுக்கப்படும்.

இரவு பகல் எந்நேரமும் சேவை அளிக்கப்படும்.

சலார் சகாயம்.

84, பாங்ஷால் வீதி சின்னக்கடை, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**அரசாங்க கேள்விகள்**
**பொது வேலைத் திணைக்களம்**

என் 723 - கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் மாவட்ட உதவி வைத்தியருக்கு குடிமனை அமைத்தல். கேள்விகள் முடிவு திகதி 24-4-68. இதன் முழு விபரங்களுக்கும் 29-3-68 இல் வெளியான அரசாங்க வர்த்தமானியின் I ம் பகுதி, II ம் தொகுதியைப் பார்க்கவும். G.P.2245

## சாம்பியனானது

நீர்வேலி, வெள்ளி

வலிகாமம் கிழக்கு காரியாதிகாரியின் பிரிவில் விளையாட்டு அமைச்சின் ஆதரவில் நடைபெற்ற உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டியில் நீர்வேலி ஸ்ரீ சுப்பிரமணிய விளையாட்டுக்கழகமும் ஆவரங்கால் எவறஸ்ற் விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. ஸ்ரீ சுப்பிரமணிய விளையாட்டுக் கழகம் 3—1 கோல்களால் வெற்றியீட்டிச் சாம்பியன் கோஷ்டியாகத் தெரிவு செய்யப்பட்டது.

நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு எஸ். சிறினிவாசன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார். வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி திரு. க. கந்தப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

## ஸ்டார் வெற்றி

உடுவில் வெள்ளி

உடுவில் ஸ்டார்விளையாட்டுக்கோஷ்டிக்கும் சுதுமலை 'கிங்ஸ் பிளவர்ஸ்' விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் உடுவில் மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியில் ஸ்டார்கோஷ்டி வெற்றிபெற்றது.

## நீல இல்லம் சாம்பியன்

ஊர்காவற்றுறை, வெள்ளி

கொழும்புத்துறை ஆசிரியகலாசாலை இல்லங்களிடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் நீல இல்லம் பச்சை இல்லத்தை 7—5 கோல்களாலும் மஞ்சள் இல்லத்தை 2—1 கோல்களாலும் தோற்கடித்து உதைபந்தாட்ட சம்பியனானது. மத்தியஸ்தராக உடற்பயிற்சி ஆசிரியர் திரு எம். பதிமநாதன் கடமையாற்றினர்.

## யோசனைகள்...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

ந்து கொண்டுவருகின்றது. ஆலயங்களில் புராணப்படிப்புகள் நடைபெறுகின்றபோது மக்கள் பெருந்தொகையில் சமூகமளித்து சமயக்கருத்துக்களை அறிந்துகொள்ளவேண்டும்.'

திரு. என். தெய்வேந்திரம் நூலின் முதற்பிரதியை வாங்கினார். தியாகி ராஜகோபாலும் உரைநிகழ்த்தினார். திரு. ரி. இராசரத்தினம் நன்றியுரை கூறினார்.

5-வது கிரிக்கெட் டெஸ்ட்

# மேற்குஇந்தியா 1-வது இன்னிங்ஸ் 3 விக்கட்டுக்கு 243

## கன்ஹாய் 113 ஓட்டங்கள் எடுத்து ஆட்டம் இழக்கவில்லை

ஜோர்ஜ்டவுன், மார்ச் 2

மேற்கிந்தியாவுக்கும் இங்கிலாந்துக்குமிடையேயான ஐந்தாவதும், கடைசியுமான கிரிக்கெட் டெஸ்ட் போட்டியின் முதல் நாளாகிய நேற்று. ஆட்ட இறுதியில், மேற்கிந்தியகோஷ்டி, தனது முதலாவது இன்னிங்ஸில் 3 விக்கெட் நஷ்டத்துக்கு 243 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

மேற்கிந்தியகோஷ்டி, தனது முதலாவது இன்னிங்ஸைத் தொடங்கிய சிறிது நேரத்தில், தனது முதலாவது விக்கெட்டை இழந்தது. பின்னர், ஆக 72 ஓட்டங்கள் எடுத்து, மொத்தம் 3 விக்கெட்களை இழந்திருந்த நேரத்தில், கன்ஹாயும் சோபேர்சும் அபாரமாக ஆடித் தமது கோஷ்டியைக் காப்பாற்றினர். கன்ஹாய 113 ஓட்டங்களுடனும், சோபேர்ஸ் 75 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகம்

## 10-வது வருடாந்த போட்டி

யாழ்ப்பாணம், சனி

கரபந்தாட்டம் [ஓவர்கேம்] மென்பந்து கிரிக்கெட், உதைபந்தாட்டம், நீச்சல்போட்டி ஆகிய நொக்கவுட் சுற்றுப் போட்டிகளை 10-வது வருடாந்த விழாவையொட்டி நடாத்த யாழ்ப்பாணம் கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் தீர்மானித்துள்ளது. வடமாகாண சனசமூக நிலையங்களும் இதர விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றுவதற்கான இச்சுற்றுப்போட்டிகளில் பங்கு பற்று மாறு கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகம் சகல கழகங்களுக்கும் வேண்டுகோள் விடுத்துள்ளது. [வி. நி.]

## உதைபந்நாட்ட சுற்றுப்போட்டி

யாழ்ப்பாணம், சனி

அரியாலையின் 49-வது சுதேசிய திருநாட்கொண்டாட்டத்தையொட்டி அரியாலை மத்திய விளையாட்டுக் கழகம் நடத்திவரும் வடமாகாண கழங்களுக்கிடையேயான நொக்கவுட் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் அரியாலை உதைபந்தாட்டக்கோஷ்டிக்கும், கிருஸ்கொப்பர்ஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் கிருஸ்கொப்பர்ஸ் கோஷ்டி 7—1 கோல்களால் அரியாலை விளையாட்டுக்கழகத்தைப் தோல்வியடையச் செய்தது.

இடைவேளைக்கு முன்னர் நடைபெற்ற போட்டியில் கிருஸ்கொப்பரீஸ் கோஷ்டியினர் 3 கோல்கள் பெற்றிருந்தனர். அரியாலைக் கோஷ்டி ஒரு கோலும்போடவில்லை. இடைவேளையின் பின்னர் கிருஸ்கொப்பரீஸ் 4 கோல்களும் அரியாலை ஒரு கோலும் பெற்றன.

இப்போட்டிக்கு திரு. ஜே. இம்மானுவல் மத்தியஸ்தம் வகித்தார். (வி. நி.)

தேசியசுவீப்

## அடம்பன்வாசிக்கு 2-ம் பரிசு

அடம்பன், வெள்ளி

சென்றமாசம் இழுக்கப்பட்ட தேசிய சுவீப்பில் 2-ம் பரிசை அடம்பஸ் வாசியான திருமதி இராசம்மா பெற்றுள்ளார். இதே தேசிய சுவீப்பில் ஓர் ஆறுதல் பரிசும் அடம்பன் வாசியான திரு. பெ. ஈஸ்வரதாசனுக்குக் கிடைத்தது. இதைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் பெருமளவில் தேசிய சுவிப் 'டிக்கட்'களை வாங்கி வருகிறார்கள்.

## நவாலி கோஷ்டி வென்றது

யாழ்ப்பாணம், சனி

அரியாலை மத்திய விளையாட்டுக்கழகத்தால் நடத்தப்பட்டவரும் வடமாகண கழகங்களுக்கிடையேயான 'நொக்கவுட்' உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் 'பி' பிரிவில் நவாலி சென். பீற்றரீஸ் விளையாட்டுக்கழகத்துக்கும் கொய்யாத்தோட்டம் கிறைஸ்த்த கிங் விளையாட்டுக்கழகத்துக்குமிடையே நடைபெற்ற ஒரு காரசாரமான உதைபந்தாட்ட மோதலில் நவாலி கோஷ்டி கொய்யாத்தோட்டக் கோஷ்டியை 3—2 கோல்களால் வெற்றியீட்டியது.

இடைவேளையின்போது நவாலி சென். பீற்றரீஸ் கோஷ்டி 2 கோல்களும் கொய்யாத்தோட்டம் கிறைஸ்த கிங் கோஷ்டி ஒரு கோலும்போடாமலும் இருந்தன. இடைவேளைக்குப் பின்னர் நவாலி ஒரு கோலும் கொய்யாத்தோட்டம் 2 கோல்களும் பெற்றன. (வி. நி.)

## உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

உடுவில், வெள்ளி

வட மாகாணத்திலுள்ள சகல காரியாதிகாரிகள் பிரிவுகளுக்கிடையே நடைபெற இருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் யாழ்ப்பாணத்திலுள்ள 13 கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன.

ஏ. பி. சி. என்ற மூன்று பிரிவுகளாக இந்த 13 கோஷ்டிகளும் பிரிக்கப்பட்டுள்ளன.

ஏ பிரிவில் கோப்பாய், தெல்லிப்பளை 1—2, சங்கானை 1—2 கோஷ்டிகளும் பி பிரிவில் வவுனியா முல்லைத்தீவு, கிளிநொச்சி மன்னார் கோஷ்டிகளும் சீ பிரிவில் பருத்தித்துறை, உடுப்பிட்டி, ஊர்காவற்றுறை யாழ்ப்பாணக் கோஷ்டிகளும் பங்கு பற்றுகின்றன.

**தேவை**

யாழ்நகரில் நல்ல நிலையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஸ்தாபனத்திற்கு முதலீடு செய்யக்கூடியவர்கள் தேவை. மே/பா 'ஈழநாடு' யாழ்ப்பாணம். 1646

நெசவாளர்கள்:

அனுபவம் வாய்ந்த பெண் நெசவாளர்கள் தேவை. முன் அனுபவம், நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் சமுகங் கொடுக்கவும்— கணேஸ் லூம்ஸ், சுன்னாகம். 1966

**வாடகைக்கு**

வீடு:

நவீன வசதிகளுடன்கூடிய வீடு ஒன்று வாடகைக்குண்டு. விபரங்களுக்கு: 418, கே.கே. எஸ். வீதியில் உள்ள வீட்டினுள் விசாரிக்கவும். 1645

## உரியவர் யார்

யாழ்ப்பாணம், சனி

அடைவு துண்டொன்று முல்லைத்தீவு பஸ் நிலையத்தில் கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் பெற்றுக்கொள்ளலாம்.

மகிழ்ச்சியூட்டும் 50 வது தினம்!

நியூ காலிங்கன்

(இணுவில்)

தினசரி 6-30, 9-30 மணி

எஸ். எஸ். ராஜேந்திரன், தேவிகா, சோ, முத்துராமன், சுந்தரராஜன் நடித்த

மறக்கமுடியுமா?

(நாளை வரை)

97-வது தினம்!

ராஜா

(யாழ்ப்பாணம்)

தினசரி 2-30, 6-30, 9-30

போயா தினங்களில் 4 காட்சி

எம்.ஜி.ஆர். - ஜெயலலிதா நடித்த

காவல்காரன்

MANOHARA

JAFFNA

Daily at

4-45, 7-00 & 9-45 p. m.

Jerry Lewis, Tony Curtis

in

BOEING BOEING

(Techni color)

REGAL JAFFNA

Daily at

4-40, -7-00, & 9-45 p.m.

Mel Ferrer

in


THE HANDS OF ORLAC

(Adults)

(Children accompanied by adults allowed)

இப்பொழுது திரையிடப்படுகிறது!

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி [கொழும்பு] | பிளாஸா [வெள்ளவத்தை] | வெலிங்டன் [யாழ்ப்பாணம்] |
| விஜயா [மட்டுநகர்] | ஸ்ரீகிருஷ்ணா [திருமலை] | விஜிதா [ஹட்டன்] |



சிவாஜி கணேசன்— சாவித்திரி

ஜெமினி கணேசன், பத்மினி,

கே.ஆர்.விஜயா, தேவிகா, நாகேஷ்

மற்றும் பலர் நடிக்கும்

சரஸ்வதி சபதம்

(ஈஸ்ட்மென் கலர்)

வியர்வை நாற்றம்

வியர்வைப் பருக்கள்

இவற்றை நீக்கி

உடம்புக்கு சுகந்த பரிமளம் கொடுப்பது

"சூரிய மார்க்"

வாசனை சந்தனப் பவுடர்

ஸ்நானத்துக்குப் பின்பு உடம்பில் நன்கு பூசிக்கொள்ள உகந்தது

கிடைக்குமிடம்:

சுந்தரம் பிறதர்ஸ்

கோவில் அபிஷேகப் பொருட்கள்

ம ருச் சரக்கு விற்பனையாளர்

(புதிய பஸ்நிலையத்துக்கு அருகாமை)

73, மின்சாரநிலையவீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடபகுதி அசைஸ் விசாரணை

# 2ம் எதிரி கட்டிப் பிடிக்க 1ம் எதிரி வெட்டினுர்

## கொடிகாமம் கொலை வழக்கில் வீரபத்திரன் சாட்சியம்

யாழ்ப்பாணம், சனி

"நான் ஆடு தேடிக் கொண்டு சென்றபோது 'ஐயோ' என்ற சத்தம்கேட் டது. வீரபாகுவை 2-ம் எதிரியான கந்தையா மாஸ் டர் கட்டிப்பிடித்துக்கொண் டுநின்ருர். 1-ம் எதிரி கண பதிப்பிள்ளை கொடுவாக்கத் தியால் வெட்டினுர்." நான் 'ஐயோ ஐயோ' என்று கத் தினேன். 'கத்திஞல் உன்னை யும் வெட்டிப்போடுவேன்' என்று 1-ம் எதிரி கூறினுர். நான் ஓடிவிட்டேன்."

கொடிகாமம் கொலை வழக்கு நேற்றுக்காலை வட பகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ சி. முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது, சாட் சியமளித்த நல்லதம்பி வீர பத்திரன் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கில் 67,ம்ஆண்டு ஜூலை மாதம் 4-ம் தேதி கொடிகாமப் பகுதியில், சின்னத்தம்பி கணபதிப் பிள்ளை, வைரவி கந்தையா ஆகியோர் கணபதிப்பிள்ளை வீரபாகுவைக் கொலைசெய் ததாக குற்றஞ்சாட்டப்பட் டிருந்தது.

1-ம் எதிரிசார்பில் பாரிஸ் டர் எம். சிவானந்தன், புறக்டர் கே. ஞானச்சந்தி ரனின் அனுசரணையுடன் ஆஜராஞர். 2-ம் எதிரி சார் பில் அட்வக்கேட் கே. வி. எஸ். சண்முகநாதன் புறக் டர் எஸ். கே. திரவியநா யகத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் கே. பிள்ளையினுர் நியமிக் கப்பட்டிருந்தார். முடிக்கு ரியதரப்பில் அட்வகேட் சுனில் டி சில்வா ஆஜராஞர்.

வீரபத்திரன் சாட்சியமளி த்த போது தொடர்ந்து கூறுவதாவது:-

'ஆடுகள் தேடப்போன போது 'பா' 'பா' என்ற சத்தம் போட்டுக் கொண்டு போனேன். சம்ப வம் நடந்த இடத்திலிருந்து நான் வீரபாகுவின் தகப்பன் வீட்டிற்குப் போனேன். மகனை வெட்டிப்போட்டாங் கள் என்றேன். சைக்கிளில் கொடிகாமம்போய் பின்பஸ் ஸில்பொலிசுக்குப்போனேன்

பாரிஸ்டர் எம். சிவானந் தன் குறுக்குவிசாரணை செய் தார்.

வழ: எத்தனை வழக்குக ளில் குற்றப்பட்டிருக்கிறீர்? —4வழக்குகளில்.

நீதியரசர்: என்னென்ன வழக்கு? —பெண்கடத்தல் வழக்கில் 9 மாத சிறைத் தண்டனை கிடைத்தது.

நீதி, பலாத்காரமாகத்தூக் கினீரா?—ஆம்.

வழ: பெண்கடத்துவழக் கில் நீரும் சாட்சியமளித் தீர்?—ஆம். அப்பெண் என் னுடன் ஒற்றுமையாக வந் தாரென்று கூறினேன்.

நீதி: உமது சாட்சியத்தை நம்பாமல், உமக்கு அவ்வழ க்கில் தண்டனை கிடைத் தது?-ஆம்.

நீதி: இப்ப திருமணம் முடித்துவிட்டீரா?— பெண் ணைக் கடத்து முன்பே திரு மணம் முடித்துவிட்டேன். பெண்ணைக் கடத்தும்போது எனக்கு 4 பிள்ளைகள். அத ற்குப் பின் 5 பிள்ளைகள்.

நீதி: இப்ப அந்தப் பெண் எங்கே?-கன்னியர் மடத்தில் [சிரிப்பு]

பாரிஸ்டர் சிவானந்தன் இன்று தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்வார்.

## இடையூருக...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உயர்த்தும், தாழ்த்தும். ஆதலினுல் விதிசதிசெய்ய முயன்ருலும் எனது தொகுதி மக்களின் அன்பு ஒன்றே எனக்கு வேண்டும் என்று இறைவனைப் பிரார்த் தித்துவருகின்றேன்.

எனது தொகுதி மக்களின் நன்மைகருதியே பாராளு மன்றம் சென்றேன். அங்கே கிடைத்த பதவிகளை தமிழி னத்தின் நன்மை கருதியே ஏற்றேன். பதவி எனக்கு அடிமையே யொழிய, நான் பதவிக்கு அடிமையல்ல.

எதிர்காலத்தில் தமிழினம் பயங்கரமான சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ளது. தமிழ்க்காங்கிரஸ்கட்சியைப் பொறுத்தவரை தமிழினம் விமோசனம் அடையச் சரி யான பாதையை வகுக்கும். இது உறுதி. எவ்விதத்தடை களும் எமது கொள்கை களைத் தகர்கமுடியாது. ஜீ. ஜீ. பொன்னம்பலமே எனது அரசியல் குரு ஆவார். 25 வருடங்கட்கு முன் எந்ததொகுதியில் தனது அரசியலை ஆரம்பித் தாரோ அதே தொகுதியில் என்னைப்புகுத்தி அரசியலில் உயர்ந்த நிலையை எனக் களித்தார்."

வவுனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் பேசுகை யில், "தேசிய அரசாங்கம் எதிலும் நல்லதையும் நீதி யையுமே செய்கின்றது. தேசிய அரசாங்கம் திற மைக்கு முதலிடம் கொடுப் பதால் பிரச்சினைகள் ஏற்படு வதில்லை. இழந்த உரிமை களைப் பெற்றுத்தருவதாகக் கூறிக்கொள்ளும் ஒரு கட்சி யினர் உள்ள சொற்ப உரிமைகளையும் பறி கொடுத்துவிட்டார்கள்," என்று சொன்னுர்.

கிளிநொச்சிப்பட்டின சபைத்தலைவர் திரு. வி. ஆனந்தசங்கரி பேசுகையில் "மாவட்டசபை விடயத்தில் ஒரே கொள்கையையே கடைப்பிடிப்போம்" என் ருர்.

மற்றும் திருவாளர்கள் ஸ்ரீதரன், ஸ்ரீபாஸ்கரன், கே. மோதிலால் நேரு, வி. பி. சுந்தரலிங்கம், ம. குலேந் திரன், குணசிங்கராசா, அகஸ்தீன், சைவப்புலவர் சி. வல்லிபுரம், சிவஞானம் ஆகியோரும் பேசினர்.

## கொள்கையை...

[1-ம் பக்கத்தொடர்ச்சி)

சாங்கம் அமைத்தபோது கூட பதினுன்கு அம்சத் திட்டமொன்றை உரு வாக்கி அதைப் பொதுமக் கள் முன்வைத்தோம்" என்று தெரிவித்த திருமதி சிறிமா பண்டாரநாயகா திரு. டட்லி சேனநாயக்கா வுக்கும்ஒருசவால்விடுத்தார்

திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்துடன் செய் துள்ள இரகசிய உடன்படிக் கையைப் பொது மக்கள் அறிந்து கொள்ளுமாறு வெளியிட முடியுமா என திருமதி சிறிமா கேட்டார்.

பொதுக் கொள்கைத்திட் டத்தில் ஓர் அம்சம்கூட காலஞ்சென்ற பிரதமர்

## 'ஈழநாடு' கீலக வருட பஞ்சாங்கம்

13-4-68 'ஈழநாடு' கீலக வருடப்பிறப்புச் சிறப்பிதழாக வெளி வருகிறது. இந்துக்கள் ஒவ்வொருவரின் வீட் டிலும் அவசியம் இருக்க வேண்டிய கீலக வருடப் பஞ்சாங்கம் 'ஈழநாடு' சிறப்பிதழில் முக்கிய அம்சமாகும். வாசக நேயர்கள் தங்கள் பிரதி களுக்கு முன்கூட்டியே 'ஈழநாடு' பத்திரிகை விற்பனை யாளர்களிடம் ஒழுங்குசெய்துகொள்ள வும் அதிக பிரதிவேண் டும் பத்திரிகை விற்பனை யாளர்கள் விநியோக மனேஜருடன் உடனடி யாகத் தொடர்பு கொள்ளவும்.

## சுவீப்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 52 R 0255 | 36 B 0647 |
| 29 V 0439 | 38 V 0889 |
| 37 P 0454 | 40 T 0866 |
| 17 A 0581 | 25 V 0087 |
| 30 J 0529 | 58 R 0370 |
| 48 N 0512 | 33 K 0201 |
| 32 F 0225 | 30 Y 0561 |
| 26 Y 0721 | 25 Z 0844 |
| 40 K 0108 | 20 R 0503 |
| 05 L 0766 | 54 E 0768 |
| 20 H 0558 | 39 D 0458 |
| 30 X 0522 | 43 B 0244 |
| 40 G 0568 | 42 B 0579 |
| 17 H 0090 | 31 T 0228 |
| 06 E 0921 | 19 Z 0907 |
| 26 W 0145 | 04 H 0068 |
| 27 G 0280 | 60 H 0090 |
| 56 Q 0289 | 24 D 0635 |
| 13 T 0110 | 28 T 0636 |
| 24 L 0428 | 36 A 0029 |
| 25 P 0898 | 54 G 0257 |
| 29 L 0510 | 01 P 0121 |
| 04 K 0849 | 29 G 0294 |
| 27 A 0983 | 17 U 0037 |
| 03 S 0330 | 46 B 0908 |
| 36 M 0030 | 32 B 0645 |
| 01 N 0510 | 26 C 0327 |
| 43 Y 0719 | 23 X 0811 |
| 13 E 0402 | 40 L 0224 |
| 47 Y 0680 | 48 P 0859 |
| 28 N 0855 | 27 D 0538 |
| 40 U 0324 | 31 A 0343 |
| 15 M 0400 | 53 F 0285 |
| 33 J 0382 | 58 C 0373 |
| 05 G 0907 | 56 V 0860 |
| 10 J 0107 | 39 D 0621 |
| 01 U 0301 | 12 Q 0796 |
| 01 R 0776 | 49 U 0021 |
| 15 N 0235 | 36 P 0778 |
| 56 Q 0684 | 38 K 0427 |
| 56 A 0034 | 16 K 0851 |

(இவை உறுதிப்படுத்தப் பட வேண்டியவை)

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வ ரன் தேவஸ்தானத்தில் 7-ம் திருவிழாவாகிய இன்று மாலை 6 மணி முதல் இரவு 7-30 மணி வரை நல்லை ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பி ரான் சுவாமிகள் அவர்க ளால் சம்பூர்ண இராமாய ணக் கதாப்பிரசங்கத் தொ டரில் "இராவண சன்னி யாசி" என்னும் பொருள் பற்றிய கதாப்பிரசங்கமும் இரவு 7-30 மணிக்கு வசந்த மண்டப பூஜையும், பின் னர் சுவாமி ஆட்டுக்கடா வாகனத்தில் வெளிவீதி வலம் வருதலும், இரவு 10 மணிக்கு அர்த்த ஜாமப் பூஜையும் நடைபெறும்.

ஃ ஃ ஃ

வல்வெட்டித்துறையில் உள்ள ஸ்ரீ வாலாம்பிகை சமேத ஸ்ரீ வைத்தீஸ்வர கோவிலில் இன்று கொடி யேற்ற வைபவத்துடன் உற் சவம் ஆரம்பமாகியது. அடுத்த மாதம் 12-ந் திகதி தேர் உற்சவமும், 13-ந் திகதி சித்திரை வருடப் பிறப்பன்று ஊறணி சமுத் திரத்தில் தீர்த்தோற்சவ மும் நடைபெறும்.

திரு. பண்டாரநாயக்கா [illegible] அவர் சொன்னுர்.

மாவட்ட சபைகள் வந்தால்

# மத்திய அரசாங்கத்தின் பலம் குறைந்துவிடுமாம்

## முன்னுள் நீதியரசர் கருத்து

கொழும்பு, வெள்ளி

மாவட்டசபைகள் அமை க்கப்பட்டால் தற்பொழுது கச்சேரிகள் மூலமாக அர சாங்கத்துக்கு கிடைத்து வரும் வருமானங்கள் மாவ ட்டசபைக்கே போய்ச் சேரும். அதனுல் அரசாங் கம் பலவீனப் பட்டுவிடும். இதோடு மத்திய அரசாங்க மும் நிதி உதவி அளிக்க வேண்டியிருக்குமாகையால் மாவட்ட சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்துக்கு மிடையில் தொடர்பாக மோதல் ஏற்பட்டுக் கொ ண்டே இருக்கும்.

இவ்வாறு முன்னுள் பிர தம நீதியரசர் ஹேமா பஸ்நாயகா கூறினுர். மாவ ட்ட சபை மசோதாவுக்கு எதிர்ப்பு தெரிவிக்குமுகமாக புதிய நகர மண்டபத்தில் நடைபெற்ற பொதுக் கூட் டத்தில் திரு. பஸ்நாயகா பேசினுர்.

மாவட்ட சபைகள் அமை ப்பது பற்றி சமஷ்டிக்கட்சி யினருக்கு மட்டுமே அக் கறை. பிரதமர் டட்லி சேனநாயகா சமஷ்டிக் கட்சியினரின் வலைக் குள் விழுந்துவிட்டார் ஜனநாயகவாதி என்று தம்மை அவர் கூறிக்கொள் கிருர். ஆனுல் அவர் ஜன நாயகத்தை நடைமுறை யில் கடைப்பிடிப்பதில்லை என்று திரு. பஸ்ஸநாயக்கா கூறினுர். மாவட்டசபைகள் அமைக்கப்பட்டால் கிராம சபைகள், நகரசபைகள், மாநகரசபைகள் அனைத்தும் தமக்குள்ள அதிகாரங்களை இழந்துவிடும் என்றும் அவர் கூறினுர்.

ஆர். ஜி. சேனநாயக்கா பேசுகையில், மாவட்ட சபைகள் அமைக்கப்பட் டால் திருக்கோணமலை சமஷ்டிக்கட்சியின் கைக்கு போய்விடும். திருக்கோண மலையைக் கைப்பற்ற இந் தியா யோசித்துக்கொண்டி ருக்கிறது. அதற்காக அது சமஷ்டிக்கட்சிக்கு உதவிகள் செய்கிறது. சமஷ்டிக்கட்சி யினர் மாவட்டசபைகள் அமைக்கப்பட்டால் தனித் தமிழ் ராஜ்யம் அமைத்துக் கொள்வார்கள். அதுதான் அவர்களின் நோக்கம் என் ருர்.

## நல்ல ஒருவர்.

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

தச்சன்தோப்பு விநாயக ராலயத்திலிருந்து அலங்க ரிக்கப்பட்ட டிராக்டர் வண் டியில் மேளதாளங்களுடன் ஊர்வலமாக விழா நடை பெறும் வதிரி உல்லிய ஞெல்லை அம்மன் கோவில் முன்றலிற்கு அழைத்துவரப் பட்டனர். வழியெங்கும் மக்கள் திரண்டுநின்று சபா நாயகருக்கும், உபசபாநாய கருக்கும் மகத்தான வர வேற்பளித்தனர்.

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அதிபர் திரு. எஸ், செல்லத்துரை தலை மையில் நடைபெற்ற இவ் விழாவில் சபாநாயகர் மேலும் பேசுகையில் கூறிய தாவது:—

"திரு. சிவசிதம்பரம் அர சியலில் முதிர்ந்தவராக விளங்குகின்ருர், பண்பும், அன்பும், நற்குணங்களும், சொல்வன்மை, செயல் வன் மைபொருந்திய ஒருவரை எம். பி.யாகத் தெரிவு செய் ததினுல் உடுப்பிட்டித் தொகுதி மக்கள் பெரும் பாக்கியம்அடைந்துள்ளனர்.

தமிழ் சிங்கள மக்களி டையே நல்லெண்ணத்தை ஏற்படுத்த எனது தந்தை யாருடன் சேர். வைத்திலிங் கம் துரைசாமி பெரிதும் உழைத்தார். காலஞ்சென்ற வைத்திலிங்கம் துரைசாமி ஓர் செயல்வீரராகத் திகழ்ந் தார். நான் அவரையும் அவரது கொள்கைகளையும் பெரிதும் மதித்துப் போற்றி வருகிறேன். நான் மற்றைய மந்திரிகள்போல் வடக்கில் ஒன்றைக்கூறியும் தெற்கில் அதனை மறுத்துக்கூறியும்வரு பவனல்ல.

சிங்களவரும் தமிழரும் இலங்காமாதாவின் இரு புத் திரர்கள். ஒருதாய் வயிற் றில் பிறந்த இருசகோதரர் கள் சண்டையிடுவது அழ கானதல்ல. தமிழ்-சிங்கள இனத்துக்கு சம அந்தஸ்தும் சமமதிப்பும் இருக்கவேண் டும். எமக்கிடையில் பிளவு கள் இருக்கக்கூடாது என்ப தற்காகப் பாடுபட்டுவருகி றேன், இலங்கையின் வளர் ச்சிஇருஇன ஐக்கியத்திலுமே தங்கியுள்ளது, எனது இறுதி மூச்சு உள்ளவரை தமிழ் — சிங்கள ஐக்கியத்துக்காக உழைப்பேன். சபாநாயகர் என்றகோதாவில்நான் அரசி யல் பேசமுடியாதவனுயிருக் கிறேன்."

பஸ்ஸூக்குள்

## பிரயாணிகள் சத்தியாக்கிரகம் வெற்றியளித்தது

இமையாணன், வெள்ளி

நீண்டநேரம் பஸ் இன்றி காவல்நின்ற பல பிரயாணி கள் பஸ்ஸூக்குள் ஏறியி ருந்து சத்தியாக்கிரகம் செய்தனர். இச் சம்பவம் யாழ்ப்பாணம் பஸ்நிலையத் தில் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து உடுப்பிட்டி பாதையால் பருத்தித்துறை செல்லும் பஸ் ஒன்றும் நீண்ட நேரம் வரவில்லையென்றும் பலமணி நேரத்தின் பின் வந்த ஒருபஸ்ஸை வேருர் சேவைக்கு விடப்பட்டதாக வும் பின்பு வந்த ஒரு பஸ் சும் சேவைக்கு விடப்படா மல் அது வேறு எங்கோ செல்கின்றது அதில் ஒருவ ரையும் ஏறவேண்டாம் என் றும் சாரதி கூறவே இத னுல் ஆத்திரம் கொண்ட பிரயாணிகள் எல்லோரும் அப்பஸ்சில் ஏறி உட்கார்ந்த தாகவும் தெரிகிறது.

சாரதி இறங்கச்சொல் லியபோது பிரயாணிகள் இறங்க மறுத்து விட்டன ராம்,

பின்பு யாழ். இலங்கைப் போக்குவரத்து சபை உயர் உத்தியோகஸ்தர்களின் உத் தரவின் பேரில் அப்பஸ் சேவைக்கு விடப்பட்ட தாம்.

## யாருடையது?

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திரு. எம். சந்திரன் என்பவரால் கண்டெடுக்கப் பட்ட கூப்பன் ஒன்று "ஈழ நாடு" காரியாலயத்தில் ஒப் படைக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் பெற்றுக் கொள்ளலாம்.

## இருந்தும் இல்லை

பண்டத்தரிப்பு, வெள்ளி

இப்பகுதிகளில் உருளைக் கிழங்கு செய்கையாளர் முதல்முறையாக நல்ல விளைச்சலைப் பெற்றிருந்த போதிலும் இங்குள்ள கடை கள் பலவற்றில் உருளைக் கிழங்கு இல்லையென வியா பாரிகள் கைவிரிக்கின்றன ராம்.

## பரிசளிப்புவிழா

தெல்லிப்பழை யூனியன் கல்லூரிவருடாந்த பரிச ளிப்பு விழா அடுத்த மாதம் 3.ம்திகதி கல்லூரிவிளையா ட்டு மைதானத்தில் நடை பெறவிருக்கின்றது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு மார்ச்மாதம் 30-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org